உ

சிவமயம்.

# சிவாநந்த போத சாரம்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

**சிவாநந்த முனிவர்**

இயற்றி யருளியது.

இஃது,

அவ்வாதீனத்து ௨௯-வது குருமூர்த்திகளாகிய

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆஞ்ஞைப்படி

காழி. வித்துவான். முத்துத்தாண்டவராய பிள்ளை

அவர்களால் பார்வையிடப்பட்டு,

கார்பார்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால்

இம்பீரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

All Rights Reserved] 1931 [1000 Copies.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவாநந்த போத சாரம்.

## முன்னுரை.

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே யெழுநீ
யன்ன மாடுறுந் தண்கயத் தருமையி னுங்கட்
சொன்ன வாகம நெறியெலாந் தெளிவுறத் துணிந்து
பன்னு ஞானசம் பந்தரைப் பரவுதற் பொருட்டே.

திருவம் பலகலை ஞானந் திகழ்தரச் செந்தமிழ்க்கந்
திருவம் பலசொலி யுள்ளித் தருமைத் திருந்துமுனி
திருவம் பலனோர் சிவாநந்தர் போதச் சிறப்புறநந்
திருவம் பலகுரு தேசிகர் தாட்டுணை சிந்திப்பமே.

சிவாநந்த போதசாரம் என்னும் இந்நூல் அநாதி முத்த முதல்வன் அநாதி பெத்த ஆன்மாக்களின் பொருட்டு அநாதியே திருவாய் மலர்ந்தருளிய வேதத்தை மூலமாகக் கொண்ட சிவாகம பூதசார ஞானசாஸ்திரத்துள் கூறப்பட்ட தசகாரியம் என்னும் பத்தவதாரத்தையும் முப்பது வதாரத்துள் வைத்துச் சிவபோகத்தைத் தெள்ளிதின் உணர்த்துவது. திரிபதார்த்தத்து ரூபம் சொரூபம் சுபாவம் விசேஷம் வியாப்தி வியாபகம் குணம் வண்ணம் தரிசனம்

சுத்தியாகிய இப்பத்தினையும் கூறப்புகுவார், பதி யிலக்கணத்தில் சிவன் பரை இச்சை ஞானம் கிரியைகட்கும், பசு விலக்கணத்தில் ஆன்மாவிற்கும், பாச விலக்கணத்தில் ஆணவம் சுத்தமாயை அசுத்தமாயை கன்மம் திரோதானங்கட்கும், பஞ்சபூதப் பழிப்பில் பூதாதிகட்கும், பொறி யறவுணர்தலில் பொறி சத்தாதி கன்மேந்திரியங்கட்கும் அந்தக்கரணசுத்தியில் கரணங்கட்கும், கலாதிஞான நிராகரணத்தில் கலாதிகட்கும், சுத்ததத்துவ தூஷணத்தில் சுத்த தத்துவங்கட்கும், தத்துவ சுத்தியில் புறக்கருவிகட்கும், அந்த ரூபாதி தசகாரியங்களை விரித்துரைப்பர். இந்நூலின் முப்பது அவதாரமும் தசகாரியத்தில் அடங்கும் நிலையும், ஐந்துமலங்கள் நீங்கி ஆன்மா சிவத்துள் இரண்டற அடங்கும் நெறியும், முப்பதவதாரத்தைத் தசகாரியமாகச் சொன்னதற்குத் தொகையும், பாச வவதாரம் பசு வவதாரம் பதி யவதாரங்களின் தொகையும், கேவல சகலங் கழன்று சுத்தாவத்தையில் இவைநிற்கும் தொகையும், முப்பதவதாரத்தைத் தசகாரியத்தில் ஏழாய் அடக்கிச் சொன்ன வகையும், மலரடிக்கீழ் வைத்துத் தானாக்கி யருளும் சிவரூபமும், பாத நிழற்கீழ் நிற்பித்து ஒப்பச் செய்தருளும் சிவதரிசனமும், ஏகனாகி நின்று அடக்கி யருளும் சிவ யோகமும், மலரடிக்கீழிருத்தி ஆநந்த சொரூபியாக்கும் சிவ போகமும், முதல்வன் உயிரைத் தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபங்களால் நிர்விகாரி யாக்கும் நின்மல சாக்கிரமும், ஆன்மரூபம் சிவதரிசனங்களால் தன்வண்ணஞ் செய்யும் அச்சொப்பனமும், அந்தத் தசகாரியத்துள் ஒருகாரியமுமின்றித் திருவருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தை யான் செய்வேன் என்று கருதல் மாத்திரம் நிகழ ஒப்பச் செய்யும் அச்

சுழுத்தியும், ஆன்மசுத்தி சிவதரிசனம் சிவயோகங்களால் அடங்கி நிற்பிக்கும் அத் துரியமும், சிவபோகத்தால் சிவாநந்தம் பெறுவிக்கும் அத்துரியாதீதமும், தசகாரியத்தை ஏழினடக்கிய முத்தி எழுவகையும் விளக்கப்படும்.

ஒருசார் ஆசிரியர் பாசவகையில் பூதப் பழிப்பு முதல் எட்டினையும், ஆன்மநெறியில் அதன்பின் ஐந்தினையும், பரை வகையில் அதன்பின் ஆறினையும், அதீதவகையில் அதன்பின் பதினொன்றினையும் தொகுத்துக் கூறுவதையும், பூதப் பழிப்பு முதல் பதின்மூன்றினைப் பதிமுதுநிலை கன்மநிலை ஆன்மஉண்மை ஆன்மவியல் எனச் சிவஞான போதத்து முதல் நான்கு சூத்திரப் பொருளாகவும், அப்பால் எட்டினை ஆன்மவியலென ஐந்தாஞ் சூத்திரப் பொருளாகவும், அப்பால் இரண்டினை ஆன்மநிலை அருளென ஆறும் ஏழாஞ் சூத்திரப் பொருளாகவும், அப்பால் ஆறினை ஆன்மலாப மேலீடென எட்டாஞ் சூத்திரப் பொருளாகவும், அப்பால் உலகப்பழிப்பை இரண்டாக் காணுமையென ஒன்பதாஞ் சூத்திரப் பொருளாகவும், வினைதாக்காமை யெனப் பத்தாஞ் சூத்திரப் பொருளாகவும், உடல் பற்றுவிடலெனப் பதினொராஞ் சூத்திரப் பொருளாகவும், குருலிங்க சங்கம வழிபாடெனப் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளாகவும் கூறுவதற்கும், ஒருசார் உரையாளர் பன்னிரண்டு சூத்திரங்கட்குத் தசகாரியத்தைப் பிறிதோராற்றாற் கூறுவதற்கும், சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்தைப் பதியுண்மை முதலாகச் சிவஞான முனிவர் விரித்துக் கூறுவதற்கும், தக்ஷிணாமூர்த்தி தேசிகர்

"முதற் கருத்துச் சங்கரனே முதலென்ன மொழிந்திடல்......
......ஈராறின் மூன்றுருவு மேத்தியன்பு செய்திடலே"

என்று வகுத்துக் கூறுவதற்கும், மற்றொருசார் ஆசிரியர் பெத்த சகலம் கருவிகள் நீங்காதிருப்பது, முத்தி சகலம் கருவிகள் தோன்றி நிற்பது, தத்துவாதீதம் கருவிகள் நீங்க நிற்பது என்று கூறுவதற்கும், பெத்த கேவலம் அதனின் மாறுபட்ட முத்தி கேவலம், பெத்த சுத்தம் அதனின் மாறுபட்ட முத்தி சுத்தம், கீழாலவத்தை அதனின் மாறுபட்ட மேலாலவத்தை, கேவலத்தின் மலமே யாகச் சகலத்தின் கருவியோடு கூடி நிற்ப அவை கழிந்து சுத்தத்தில் நிர்மலமாய் விளங்குவது முறைமையாம் என்று கூறுவதற்கும், துகளறுபோதம், தத்துவப்பிரகாசம், முத்தி நிலை முப்பதவதாரம் முதலிய நூல்களின் ஆசிரியர் இவற்றை வகுத்தும் விரித்துங் கூறுவதற்கும், இந்நூல் ஆசிரியர் இவற்றைத் தொகுத்துக் கூறுவதற்கும் உள்ள ஒற்றுமை நயங்களை அனுபவ வாயிலாக அறிதல் வேண்டும்; அவ்வாறு அறிந்தவர்க்கே சிவானுபவம் சுவானுபூதிகமாம்.

இந்நூல் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்துச் சாஸ்திரங்களுள் ஒன்றென்பதும், இதனை யருளியவர் சிவாநந்த முனிவரென்பதும், இம் முனிவர் அவ் வாதீனத்து எட்டாவது பட்டத்து இலகிய திருச்சிற்றம்பல தேசிகரை ஆசிரயித்தவரென்பதும் இதன் ஏட்டுப் பிரதிகளை நோக்குவார்க்குப் புலனாகும். இந்தச் சிவாநந்த முனிவர் பத்தாவது பட்டத்து எழுந்தருளிய சிவஞான தேசிகர் காலத்தும் ஜீவன் முத்தராய் இருந்தா ரென்பது இவரியற்றிய சிவாநந்தமாலை சாம்பிரதாய தீபத்தால் விளங்கும். விளங்கவே இம் முனிபுங்கவர் அவ் வாதீன கர்த்தர் மூவரது அனுபவ நிலையையும் அவர்கள் தமக்குணர்த்திய அருள் நிலையையும் பெற்றோராகி, மெய்

கண்ட தேவர் அருளிச் செய்த சிவஞான போதத்தையும், அவர் மாணவர் அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்த சிவஞான சித்தியாரையும், அவர் மாணவரின் மாணவர் உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்த சிவப்பிரகாசத்தையும், அவர் ஞானபரம்பரையில் வந்த சீகாழி மச்சுச் செட்டி அருணமச்சிவாயர் அருளிய உபதேச வார்த்தைகளையும், கங்கை மெய்கண்டார் அவர் மாணுக்கர் காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த துகளறு போதம், சிவபிரகாசக் கருத்துரைச் சூத்திரம் முதலியவற்றையும், அவர் சீடராகிய காழித் தத்துவப் பிரகாசரது தத்துவப் பிரகாசத்தையும், சிற்றம்பல நாடிகளது பிரதட மாணுக்கராகிய காழிப் பழுதைகட்டி ஞானப்பிரகாசரது மாணுக்கர் திருவாரூர்ச் சிதம்பரநாத ஞானப்பிரகாசர் அருளிச் செய்த (ஞானபாதத்திற்குச்) சிவாநந்த போதம், ஞானப்பள்ளு, அத்துவாக் கட்டளை; (யோகபாதத்திற்குப்) பிரசாத மாலை; (கிரியாபாதத்திற்குச்) சிவபூசையகவல்; (சரியாபாதத்திற்கு) அநுட்டான அகவல், புட்பவிதி, பூமாலை, புராணசாரமாகத் திருவானைக்காப் புராணசாரமும், திருமழபாடி புராணசாரமும், திருவண்ணுமலை ஒருதுறைக்கோவை யென்னும் பிரபந்தமும், ஆயிரப் பிரபந்தமும், வடமொழியிலே தியாகராஜர் திருவிளையாடற் சம்பவ முதலியவற்றையும், அவரது முதல் மாணுக்கர் தருமபுர வாதீனத்தை நிறுவிய குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகள் (1400 கி. பி.) இயற்றியருளிய சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, பரமானந்த விளக்கம், முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதிதசகாரிய அகவல், சொக்கநாதக் கலித்துறை, பண்டாரக் கலித்துறை முதலிய நூல்களையும்,

திருமபுராவாதீனத்து ஆறுவது பட்டத்தி லிருந்த திருஞானசம்பந்த தேசிகரது மாணுக்கராகிய *வெள்ளியம்பலவாண தம்பிரான் இயற்றிய முத்தி நிச்சய வுரைகள், ஞாஞ வரண விளக்கம், மிருகேந்திரம் முதலிய நூல்களையும், ஒன்பதாவது பட்டத்துத் திருநாவுக்கரசு தேசிகாருளிய சித்தாந்த நிச்சயத்தையும், மற்றும் அவ் வாதீனத்திற்குரிய ஞானப்பிரகாசதேசிகாரியம், பதிபசுபாசப் பனுவல், ஞாஞவரண விளக்கக் குறள், பரமத சங்கற்ப பரமோபதேச நிராகரணம், பரமத திமிர பானு, சிவாநுபோக சாரம் முதலிய நூல்களையும், பிற சம்பிரதாய நூல்களையும் கேட்டுணர்ந்து இந்நூலை இயற்றினார். இவரொடு கற்றோராகிய சுவர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பல முனிவர் அறிவாநந்த சமுத்திரம், திரிபதார்த்த தீபிகை என்னும் நூல்களையும், வேதாரணியம் தாயுமானவர் திருப்பாடற்றிரட்டையும் இந் நூலாசிரியர் காலத்தே இயற்றியருளிஞர்கள்.

திருநெல்வேலி ம-௱-௱-ஸ்ரீ S. அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M.A.,L.T., *(Reader in Tamil, Institute of Oriental Research, Madras University)* இச் சிவாநந்தபோத சாரத்தின் ஏட்டுப் பிரதியொன்று பல அரிய ஏடுகளின் இடையே தமது திருமாளிகையிலிருந்ததனை உரையுடன் எழுதி மிக்க அன்போடு எனக்கு அனுப்பிஞர்கள். அவர்கட்குச் சம்பிரதாய நூல்களி லிருக்கும் பேரவாவும் ஆர்வமும் யாவராலும் பெரிதும் பாராட்டத்தக்கன. இப்பிரதியை என் பிரதியோடு ஒப்பு நோக்க எனக்கு அவர்கள் திருவுளம்பற்றியதற்காக மிக்க நன்றி செலுத்துகின்றேன்.

* இவர் 4-வது முதல் 6-வது குருமூர்த்திகள் காலம் வரை தம்பிராஞராக இருந்தவர்.

இந்தப் பிரதியைத் தருமபுர வாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு நான் சமர்ப்பித்த போது, அப் பெருந்தகையார் தமது ஆதீனப் பிரதிகளோடு சீர்தூக்கிப் பரிசோதித்து, இதனைப் பிரசுரிக்கும் வண்ணம் எனக்கு அநுமதி தந்தருளினார்கள். சைவ நூல்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் என்னும் நால்வகைப் பயிற்சியாலும் சைவசமய வுபதேச விருத்தியும், சைவ தத்துவ நூல்களின் விருத்தியும், ஏனைத் தமிழ் நூல்களின் விருத்தியும் இடையறாது செய்து வருவதே சைவாதீனத்தின் நோக்கமென்று உணர்ந்த இக் குருபரர், அடியேன் மேன்மேலும் இத்தகைத் தொண்டைச் செய்து வருவதற்காக எனக்கு மன வெழுச்சியையும் அருள் நோக்கத்தையும் மீதுறச் செய்யுமாறு பரமகருணாநிதியைத் தாழ்மையோடும் பிரார்த்திக்கின்றேன்.

தெருளாதார்க் கன்றித் திகழாத போக
மருளாளன் காட்சி மருவும்—அருளாத
வன்றோர்க் கொடிவருடு மாடத் தருமபுரத்
தின்றோர்ந் தறிந்தே னியான்.

ஸ்ரீகாழி,
2—10—30. } ப. அ. முத்துத்தாண்டவராயன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவாநந்தபோத சாரம்.

## நூல்

முப்பது வகைப்படு முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தேசகா ரியத்திற்
பொறையிலைம் பூதமும் பொய்யென வருளான்
முறையுற நீங்கு முத்திச் சகலமும்
பஞ்ச பூதப் பழிப்புறு முடலு
மஞ்சு புலன்றனை யறிந்திடும் பொறிகளுஞ்
செறிந்திடும் புலனைத் தெரிந்திடிற் றனித்தனி
யறிந்திட வறியா வந்தக் கரணமு
மக்கர ணங்க ளகல வகன்றிடுந்
தக்க கலாதி தத்துவக் குழூவு
மத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்ததத் துவமுந் தொடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்கலிவ் வேழுந்
தத்துவ ரூபந் தத்துவ தெரிசனந்
தத்துவ சுத்தி தன்னு ளடங்குப்
மாயையுங் கன்மமு மாமா யையுமென
வாயவிம் மூன்று மகன்றிடு மிவனை
தத்துவா தீதந் தன்னின்மைக் குழம்பினை

யொத்திடு மலவிரு ளுறுவது கேவலம்
அற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது கேவல நிலையது வாகும்
இருண்மல நீங்குதற் கெண்ணுத றிரோதம்
அருள்வடி வான வவதா ரமாகும்
அங்குயிர் காண்பதற் காதர வுறுமிடஞ்
சங்கர னிச்சா சத்தியின் றெரிசனம்
மருவுயிர் வெளிப்பட வல்லிரு ணீக்கந்
தருவது கிரியா சத்திய தாகும்
அந்தவா ருயிர்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்
முழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியு
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்
புணர்ந்தவல் லிருளினைப் புரைபுரை தொறுஞ்சென்
றுணர்ந்திடு மறிவான்ம ரூபம தாகுங்
கேவல வல்லிருள் கீழ்ப்படத் தான்முழு
தாவதே யான்ம தெரிசன மாகும்
நயந்திடு மிச்சா ஞானக் கிரியையிற்
பயின்றிடா நிலையது பரைதெரி சனமே
திரப்படு பரையினிற் சேதன வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி
விரவிய பரையின் வியாபகத் துடனுயிர்
பரவிநின் றிடுவது பரையினில் யோகம்
ஆங்குறு பரையி னனுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரையினிற் போகம்
முற்பரை யோக முழுப்பரை சாக்கிரந்

தற்பரை போகஞ் சாக்கிரா தீத
மோர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சோர்ந்திட லான்ம சுத்திய தாகும்
இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலுளத்
தருளெழ வாணவ மகன்றது மிவனே
யறிவக லதீதத் தனுபவஞ் சிறிதாங்
குறுவது வேசுக ரூபம தாகு
மான்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்றநிற் பதுவே சுகாதீத மாகும்
அகண்டமுஞ் சுகவடி வாஞ்சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்
எங்குங் கலந்த இறைவனைத் தொழிலையு
மங்கங் கறிவ தருஞ்சிவ தரிசனம்
மருளதி கார மலமகன் றிடவே
யருளது மேலிடு மவதா மிவனே
யற்புத வருளா லத்துவி தம்பெறச்
சிற்பரத் தியைவது சிவயோக மாகும்
நற்பர சிவத்துற நண்ணுபே ரின்பஞ்
சிற்பரா னந்த தெரிசன மாகும்
பெறுபரா னந்தப் பெருக்கினிற் கலந்தாங்
குறுவ தானந்த யோகம தாகும்
அருந்து மானந்த வவச மேலீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையகங் காண்பது மறித்துக் காட்சியே.

## இதன் பொருள் :

௧. முப்பது வகைப்படு முத்தி நன்னெறியினைச்
செப்புவனமைத்துத் தெசகாரியத்தில்—எ-று

உயிர் பஞ்ச மலங்களும் பஞ்ச சத்திகளுங் கழன்று சிவானந்தவனுபவத்தைப் பெற்று அதனுள்ளே யழுந்தி அவ்வின்பமேயாயிருக்கு மோட்ச வழியாகிய பூதப்பழிப்பு, பொறியறவுணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதி ஞான நிராகரணம், சுத்த தத்துவ தாடணம், தத்துவாதீதம், சகலதெரிசனம் ஆகப் பாசவவதர மேழும், கேவலம் கேவல தெரிசனம் கேவலாதீதம் தன்னுண்மை சைதன்னியதெரிசனம் ஞானதெரிசனம் பரைதெரிசனம் பரையில் வியாத்தம் பராயோகம் பராபோகம் சுத்தபாராயோகம் முத்தி சாக்கிரம் சாக்கிராதீதம் பரையிலதீதம் சுத்தவத்தை சுகரூபம் சுகாதீதம் சிவப்பேறு பரமானந்ததெரிசனம் பரமானந்தயோகம் பரமானந்தபோகம் பரமானந்த மேலீடு பரமானந்த அவசமாம் முப்ப தவசரத்தையும் முத்திச் சகலம், பூதப்பழிப்பு, பொறியறவுணர்தல் அந்தக் கரண சுத்தி கலாதிஞானநிராகரணம், சுத்த தத்துவ தாடணம் பிராணவாயு நீக்கம், கேவலம், கேவலநிலை, திரோதான சத்தியின் தெரிசனம், இச்சா சத்தியின் தெரிசனம், ஞானதீதம், ஆன்மரூபம், ஆன்மதெரிசனம் பரைதெரிசனம், பரையில்வியாத்தி, பரையோகம் பரைபோகம் ஆன்மசுத்தி, சுகரூபம், சுகாதீதம், சிவரூபம், சிவதெரிசனம் சிவயோகம் சிற்பரானந்ததெரிசனம் சிற்பரானந்தயோகம், சிவபோகம், உலகப் பழிப்பு எனத் தசகாரியத்தி லடக்கிச் சொல்லுவனென்க.

சிவபோகத்தின்பின் வரும் உலகப்பழிப்புஞ் சிவபோகத்துளடங்குமோ வென்னிற் சிவபோகம் பொசித்த சாத்தியானர் பரமே பார்த்திருப்பதன்றிப் பதார்த்தங்களைப் பாரார்ராகையால் உலகப் பழிப்புஞ் சிவபோகத்துள்ளே யடங்குமென்க.

இதற்குப் பிரமாணம்.

நனவாதி யந்தத்தி னுடுசுகந் தன்னைக்
கனவாதி யந்தத்திற் கண்டு—நனவாதி

தோற்றியிடும் போதந்தச் சுகரூபங் கண்டவர்கள்*
மாற்றிடுவ ரென்றும் மலம்.

உ. பொறையில் ஐம்பூதமும் பொய்யென வருளால்
முறையுற நீங்கு முத்திச் சகலமும்—எ-து

உயிரைத் தன்னகத்துப் பொறுத்தல் செய்யாத சிறுமையை யுடைய ஆகாச முதலிய ஐம்பூதங்களையும் பொய்யென்று குருவருளால் அவதாரங்களை முறையைப் பொருந்தும்படி நீங்கும் முத்திச் சகலமு மென்க.

நூல்களிலே காரணவவத்தைகள் மூன்றையும் கேவல முதலாக வழங்குவது தானும் காரியாவத்தைகள் பதினைந்தையும் பெத்தமுத்தி யென விரண்டு விதமாக முப்பதாக்கி யவற்றினைச் சகல முதலாக வழங்குவது தானும் எதனாலென்னில், காரணவவத்தைகள் கேவலத்தினின்றுஞ் சகலத்தையும் சுத்தத்தையும் முறையே பொருந்துதலானும் பெத்த முத்திகளாங் காரியவவத்தைகள் சகலத்தினின்றுங் கேவலத்தையுஞ்சுத்தத்தையும் முறையே பொருந்துதலானு மென்க.

இப்படி யவத்தைகளை முப்பத்துமூன்றாகக் கொண்டு வழங்குவதற்குப் பிரமாணம் துகளறுபோதத்திலும் அதற்கு வழிநூலாந் தத்துவப்பிரகாசத்திலும் வருவது கண்டுகொள்க.

இவ் வவதரத்தைத் துகளறுபோதத்திற் றத்துவாதீதத்தின் பிற் கூறிய தென்னை யெனின் தத்துவங்களைத் தெரிசித்து அதீதப் பட்டு நின்றுழி யிவ்வா றவதரப்பட்டு நிற்கு முறைமை சகல மன்றிக் கூடாதெனச் சகலந் தெரிசனப் படுதலிற் றத்துவாதீதத்தின் பின் சகல தெரிசனங் கூறப்பட்ட தென்க.

முத்திச் சகலமெனினுஞ் சகல தெரிசன மெனினு மொக்கும்.

ரு. பஞ்சபூதப் பழிப்புறும் உடலும்—எ-து

புறம் பிரபஞ்ச பூதங்கள் அந்நியமாகிய சடமென்று பழிக்கப் பட்டாற் போலப் பழிக்கப்படு முடலகத் தைம் பூதங்களு மென்க.

---

* கண்டவரே, என்னும் பாடம்

புறம் பிரபஞ்ச பூதங் காரணம் உடலிற் பூதங் காரியம். காரணம் ரு, காரியம் உரு.

ச. அஞ்சு புலன்றனை யறிந்திடும் பொறிகளும்—எ-து

சத்தாதியாகிய ஐம்புலனையுந் தனித்தனி யறிந்திடுஞ் சோத்திராதியாகிய ஐம்பொறிகளு மென்க.

இவற்றின் வழியவாகிய கன்மேந்திரியங்க ளைந்தையும் இவற்றுள் அடக்கிக் கொள்க.

ரு. செறிந்திடும் புலனைத் தெரிந்திடத் தனித்தனி
யறிந்திட வறியா வந்தக் காரணமும்—எ-து

பொறிகள் வழியாகப் பலவிதமாய்ச் செறிந்திடத்தகும் புலனைப் பற்றி நிச்சயித் தெழுந்தழுந்தும் பொருட்டு அகார வுகார மகார விந்து நாதங்களை யுடையன வன்றித் தனித்தனி தாமே யறிந்திட மாட்டாத மனமாதியாகிய அந்தக்கரணங்களும் என்க.

சா. அக்கரணங்க ளகல வகன்றிடுந் தக்க
கலாதி தத்துவக் குழுவும்—எ-து

கலாதி யிச்சா ஞானக் கிரியைகளினாலே யான்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகள் நிலைபெற்று விளங்குதற் கிடமாகிய அவ்வந்தக் கரணங்கள் நீங்கவே அவற்றோ டொருங்கு நீங்குவன வாகிய தகுதிபொருந்திய கலையாதியாயுள்ள தத்துவக் கூட்டமு மென்க.

புலனுகர் காலைப் பொருந்துதத்துவங்களிற் கலாதிக ளைங்காக் கஞ்சுகமாதலிற் றக்ககலாதி யெனச் சாற்றினா ரென்க.

எ. அத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்ததத் துவமும்—எ-து

அந்தத் தகுதி பொருந்திய கலாதிகள் நீங்கவே பிரேரக மொழிந்து அவற்றோ டொருங்கு நீங்குவனவாகிய சுத்தவித்தை முதலிய சுத்த தத்துவங்களு மென்க.

அ. தொடர்ந்தெழு முயிர்ப்பும்—எ-து

அவ்வைந்து வகையாகத் தத்துவ முப்பத்தாறும் நீங்கி நிற்புழி விரைந்தெழாநின்ற பிராணவாயுவு மென்க.

பிருதிவிமுதல் நாதபரியந்தம் நாமல்ல வென்று நீங்கி நிற்புழியும் பிராணவாயுவே நாமென்று நிற்றலிற் பிராணவாயு நீக்கமென வோரவதரங் கூறப்பட்டது. எனவே தத்துவதாதீத மெனினும் பிராணவாயு நீக்க மெனினும் அவதரமொன்றே யாதலால் துகளறுபோதத்திற் றத்துவாதீத மென்றும் இந்நூலிற் பிராணவாயு நீக்கமென்றுங் கூறப்பட்ட தென்பது பெறுதும்.

கூ. வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்கலிவ் வேழுந்
தத்துவரூபந் தத்துவதெரிசனந்
தத்துவசுத்தி தன்னுளடங்கும்—எ-து

இங்ஙன முத்திச் சகலமுதற் கூறிய இவையிற்றின் தோற்றவொடுக்கங்களையுந் தொழில்களையுமையந்திரிவு விகற்பமின்றிக் கண்டு இவையும் மாயேய மலமாகிய சேடமெனத் தெளிந்து தெளிந்துவிடத்து அவற்றை யந்நியமென்று மிகுதியு நீங்கலாகிய இவ்வேழுந் தசகாரியத்திற் றத்துவரூபந் தத்துவதெரிசனந் தத்துவசுத்தியென்று சொல்லப்பட்ட பாசவவதர மூன்றனு ளடங்கு மென்க.

நெடிதுற நீங்கலாவது முற்றத் துறத்தல்.

கo. மாயையுங் கன்மமு மாமா யையுமென
வாயவிம் மூன்று மகன்றிடு மிவணே—எ-து

இத்தத்துவங்கட்குக் காரணமாகிய அசுத்த மாயையுங் கன்மமுஞ் சுத்தமாயையு மென்றாகிய இம்மூன்றும் முன் சொன்னமுறையே அவதரப்பட்டு அவை நீங்கு மிடத்துத் தாமே நீங்குமென்க.

௧௧. தத்துவா தீதந் தன்னின்மைக் குழம்பினை
யொத்திடு மலவிரு ளுறுவது கேவலம்—எ-து

இவ்வாறெல்லாத் தத்துவங்களையும் நீங்கி நின்ற விடத்து மைக் குழம்பைப் போலு மிருண்மலத்தைப் பொருந்துவது கேவலமா மென்க.

௧௨. அற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது கேவல நிலையது வாகும்—எ-து

மலமாகிய இராக்காலத் துண்டான கேவலமாகிய இருளில் ஆன்மா இதுவோ கேவலமென அதனைத் தெரிசித்து நிற்பது கேவல நிலையா மென்க.

கேவலநிலையாவது கேவலத்தைத் தெரிசித்து நிற்கு நிலை. இதனைத் துகளறுபோதத்திற் கேவல தெரிசன மெனக் கூறப்பட்டது.

௧௩. இருண்மல நீங்குதற் கெண்ணுத றிரோதம்
அருள்வடி வான வவதர மாகும்—எ-து

முன்சொன்ன இருண்மலமாகிய கேவலத்தை நீங்குதற்கு ஆன்மாச் சிந்தித்தலே முற்சினமருவு திரோதாயி கருணையான அவதரமா மென்க.

இதனைத் துகளறுபோதத்திற் கேவலாதீத மென்று கூறப்பட்டது.

இனி முற்சினமருவு திரோதாயி கருணையான அவதரத்தில், ஆன்மா முன் கலாதி யிச்சா ஞானக் கிரியைகளினாலே பெத்தத்திற் கேவல நீங்கிச் சகலத்தில் விசுவவியாபாரப்படுமாறுபோல முத்தியிற் சிவனுடைய இச்சா ஞானக் கிரியைகளினாலே இங்ஙனம் அவதரப் பட்ட கேவலம் நீங்கி யேற்பட்டு விளங்கும் இச்சா ஞானக் கிரியா சொரூபமாகிய ஆன்மரூப மவதரப்பட வேண்டுதலிற் சிவனுடைய

இச்சாஞானக்கிரியைகளின் தெரிசனங் கூறுகின்றது. இம்மூன்றினை யுந் துகளறுபோதத்தில் ஞான தெரிசனமென வொன்றாக்கிப் பிற் கூறப்பட்டது. அது சகல தெரிசனத்தைப் பிற் கூறியது போலும்.

கச. அங்குயிர் காண்பதற் காதர வுறுமிடஞ்
சங்கர னிச்சா சத்தியின் றெரிசனம்—எ-து

இருண்மல நீங்குதற் கெண்ணின விடத்துக் கேவல நீங்கி யான்மரூபங் காண்டற்கு விருப்பமுறு மவதரம் சிவனுடைய இச்சா சத்தியின் தெரிசனமா மென்க.

கரு. மருவுயிர் வெளிப்பட வல்லிரு ணீக்கந்
தருவது கிரியா சத்திய தாகும்—எ-து

அங்ஙனம் விருப்ப மருவின ஆன்மாத் தனது ரூபங்காணும் பொருட்டுக் கேவலமாகிய மிகுந்த விருளை நீக்கஞ் செய்வது சிவனுடைய கிரியாசத்தியின் தெரிசனமா மென்க.

கசு. அந்தவா ருயிர்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்—எ-து

தனது ரூபங் காண்கின்ற அந்தக் கூரிய வுயிர்க்குச் சிவ ஞானத்திலே கலப்பைத் தந்தது சிவனுடைய ஞான சத்தியின் தெரிசனமா மென்க.

கஎ. முழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியு
நழுவிநின் றிடுவது ஞான நீதம்—எ-து

இவ்வாறு ஆன்மாக்க டோறும் பூரணமாய் நிலைபெற்று நின் றுணர்த்துவனவாகிய சிவனுடைய இச்சாஞானக் கிரியை யென்னு மூவகைச் சத்தியையுந் தனித்தனி தெரிசித்தலை விட்டு அம்மூவகைச் சத்தியையும் ஒருதொகையாகக் கொள்ளப்படும் அந்தச் சிவஞானத்தி னுள் ஒடுங்கி அதன் வசமாய்த் தன திச்சாஞானக் கிரியைகளின் விகாரமற்று நின்றிடுவது ஞானநீதமா மென்க.

இதனைத் துகளறுபோதத்தில் ஞான தெரிசனத்து ளடக்கிக் கூறுமாறு அதிலுய்த்துணர்ந்து கொள்க.

கஅ. புணர்ந்தவல் லிருளினைப் புரைபுரை தொறுஞ்சென்
றுணர்ந்திடு மறிவான்ம ரூபம தாகும்—எ-து

அது நாம் அது நாமெனப் புலன்கடைப்பூழைதொறு நுழைந்து சென்று பின்பு அது நாமல்ல அது நாமல்ல வென்று, மேற்பட்டுப் பொருந்திய கேவலமாகிய மிகுந்த விருளினை இன்றளவு மறைத்த விருளிதுவோ வென வியந் துணர்ந்திடும் ஞானம் ஆன்ம ரூபமா மென்க.

கசு. கேவல வல்லிருள் கீழ்ப்படத் தான்முழு
தாவதே யான்ம தெரிசன மாகும்—எ-து

அந்த ஞானத்தை நானென நின்ற ஆன்ம ரூபமெனும் கேவலமா மறியாமை கீழ்ப்பட் டொழிய ஆன்மாவின திச்சா ஞானக் கிரியையாகிய பசுகரணங்கள் சென்றனது காரணமாகிய இச்சா ஞானக் கிரியை முழுதுமாவதே ஆன்ம தெரிசனமா மென்க.

உ0. நயந்திடு மிச்சா ஞானக் கிரியையுட்
பயின்றிடா நிலையது பரைதெரி சனமே—எ-து

விடியற்காலத் தருணவுதயம் போல ஆன்மாக்களிடத்துக் கடாட்சம் பொருந்துஞ் சிவனுடைய இச்சா ஞானக் கிரியைக்குட் போதஞ் சீவியாது உச்சிக் காலத்துக் கதிரோனொளி எங்கும் நிரந் தரமாய்க் குலவுதல் போல எங்கும் பொதுவாக நிறைந்து நிலவும் பரையின்கண்ணே நிலைபெறுவது பரை தெரிசனமா மென்க.

உக. திரப்படு பரையினிற் சேதன வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி—எ-து

நிச்சயப்படா நின்ற பரை நிறைவிலே ஆன்மாத் தனது வியாபகப் பரப்பைக் கண்டறிந்தது பரையின் வியாத்தியா மென்க.

உஉ. விரவிய பரையின் வியாபகத் துடனுயிர்
பரவிநின் றிடுவது பரையினி லியோகம்—எ-து

அங்ஙனம் வியாத்தியான பரையினது வியாபகத்துடனே ஆன்மா அடிமைத்திறம் வழுவாது நின்றிடுவது பரையினில் யோகமா மென்க.

உங. ஆங்குறு பரையி னனுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரையினிற் போகம்—எ-து

அங்ஙனம் அடிமைத்திறம் வழுவாது நிற்கும் பரையின் கண்ணே அதிலுள்ள இன்பநிலைமையை ஐயந்திரிவு விகற்பமின்றி விளங்கப் பெறுவது பரையினிற் போகமா மென்க.

துகளறுபோதத்திற் சுத்தபரா யோகமென்று கூறப்பட்ட அவதாரமும் இதனு ளடங்கு மென்க. இதுவன்றி முத்தி சாக்கிரமுஞ் சாக்கிராதீதமும் எங்கு அடங்குமோ வென்னில்,

உச. முற்பரை யோக முழுப்பரை சாக்கிரம்—எ-து

முற் சொன்ன பரையோகமே வெற்ற வெறுந் தற்பரையாகிய முத்திசாக்கிரமு மென்க.

உரு. தற்பரை போகம் சாக்கிரா தீதம்—எ-து
அந்த மேலான பரைபோகமே சாக்கிராதீதமு மென்க.

இனித் துகளறுபோதத்திற் பரையி லதீதமென்றுஞ் சுத்தாவத்தை யென்றுங் கூறப்பட்ட அவதாரமிரண்டிலும் அடங்கும் ஆன்ம சுத்தி கூறுகின்றது.

உசா. ஓர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சேர்ந்திட லான்ம சுத்திய தாகும்—எ-து

கேவலமுதற் கூறப்பட்ட அவதாரங்களை முறையே யுணர்த்த உணர்ந்து அது அதுவாய் நின்ற போதம் சற்றும் பதைப்பற்றதே ஆன்மசுத்தியா மென்க.

எனவே ஆன்மா எதை யெதை யுணர்ந்ததோ அதுவது மய மாய்த் தானென்ெறொரு முதலற்றுப் போத மடங்கி நிற்றலே ஆன்ம சுத்தியென்ப தாயிற்று.

உஎ. இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலுளத்
தருளெழ வாணவ மகன்றது மிவணே—எ-து

விடிதலுக்கு மிக விருண்ட குமரி ருட்டானது நீங்க விடியற் காலத் தருண வுதயமாய் உச்சிக்காலத் தெங்கு நிரந்தரமாய்க் கதிரொ ளொளி யெழுந்து நிற்றல்போல் ஆன்மாக்க ளுள்ளத் தென்று நீங்கா தொளித்திருந்த அருளானது ஞான தெரிசனமுதற் பையப்பையப் பெ யெழா நிற்ப, மடிதலுக்காருயிருண்ட அறியாமையாகிய ஆணவம் பையப்பையக் குறைந்து நீங்கினதும் இங்ஙனம் ஆன்ம சுத்திப் பட்ட அவதாரத்திலே யென்க.

எனவே மாயேயமும் மாயையும் கன்மமும் மாமாயையும் ஆண வமு மென்னு சொல்லப்பட்ட பஞ்சமலங்களும் நீங்கின முறை கண்டு கொள்க.

இங்ஙனம் கேவலவவதர முதல் இதுகாறும் பசுவவதரம். இனிப் பதியவதாரங் கூறுகின்றது.

உஅ. அறிவக லதீதத் தனுபவஞ் சிறிதாங்
குறுவது வேசுக ரூபமதாகும்—எ-து

ஆன்ம போதம் பதைப்பற் றகலா நின்ற பரையி லதீதத்துச் சிறிதாகிய வின்பத்தை இதற்கு மேலில்லையென அவ்விடத்து ஆன் மாப் பொருந்துவது சுகரூபமாமென்க.

உகூ. ஆன்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்றநிற் பதுவே சுகாதீத மாகும்—எ-து

இதற்கு மேலில்லை யென்னும்படி நிறைந்த அச்சுகப்பிரபைக்குத் தாரகமாகிய சிவ முதல் தோன்ற அதி லழுந்தி நிற்பது சுகாதீத மாமென்க.

௩௦. அகண்டமுஞ் சுகவடி வாஞ்சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்—எ-து

சட சித்துக்கள் முழுவதுஞ் சுகப் பிரபையே தனக்கு வடிவாகவுடைய சிவங் கலத்தலாற் சிவமயமெனப் பிரபஞ்சத்தைக் காண்பது சிவரூபமா மென்க.

௩௧. எங்குங் கலந்த விறைவனைந் தொழிலையு
மங்கங் கறிவ தருஞ்சிவ தெரிசனம்—எ-து

சட சித்துக்களிலேயுங் கலந்த தலைவனது பஞ்ச கிருத்தியங்களையும் அவனாலே பஞ்ச கிருத்தியப்படும் அந்த அந்தச் சட சித்துக்களிடத்திலே தனித் தனி பகுத்தறிவது மேலான சிவ தெரிசனமா மென்க.

௩௨. மருளதி கார மலமகன் றிடவே
யருளது மேவிடு மவதா மிவணே—எ-து

ஆன்மாக்களிடத்து மருண் மேலீடு செய்யும் ஆணவம் நீங்கும் பொருட்டு நின்மல சத்தியாகிய அருள் பொருந்தும் அவதாரம் இந்தச் சிவதெரிசனத்திலே யென்க.

ஆன்மசுத்தியில் ஆணவவகற்சி கூறிஅவ்வாண வவகற்சிக்குக் காரணம் அருள் வந்து பொருந்துவதா மென்றிங்ஙனங் கூறியது சிவதெரிசனமும் ஆன்மசுத்தியும் ஓரிடத்தாகலா னென்க.

௩௩. அற்புத வருளா லத்துவி தம்பெறச்
சிற்பரத் திசைவது சிவயோக மாகும்—எ-து.

அந்த நின்மலவருளா லச் சிவபோகமாகிய அத்துவிதத்தைப் பெறும் பொருட்டு அகண்ட பரிபூரணமான சிவத்திலே கூடிக் கலந்து உள்ளும் புறம்பு மொருதன்மையா யிருப்பது சிவயோகமா மென்க.

இந்தச் சிவரூபஞ் சிவதெரிசனஞ் சிவயோக மூன்றையுந் துகளறுபோதத்திற் சிவப்பேறென ஓரவதாரமாகக் கூறப்பட்டது.

௩௪. நற்பர சிவத்துற நண்ணுபே ரின்பஞ்
சிற்பரா னந்த தெரிசன மாகும்—எ-று

இன்ப கனமா மேலான சிவத்தில் அநநியம் பொருந்தவே யப்பொழுது பொருந்தாநின்ற பெரிய வின்பம் சிற்பரானந்த தெரிசனமா மென்க.

௩௫. பெறுபரா னந்தப் பெருக்கினிற் கலந்தாங்
குறுவதா னந்த யோகம தாகும்—எ-று

ஆன்மலாபம் பெறுநின்ற சிற்பரானந்த சமுத்திரத்திற் கலந்து அவ்விடத்தி லேகமாய்ப் பொருந்துவது சிற்பரானந்த யோகமா மென்க.

௩௬. அருந்துமா னந்த வவசமே வீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்—எ-து

வண்டானது அலர்ந்த நாட் பூவின் மதுவை ஆவலுடன் நிறைய வுண்டு அப்பூவை யலையாமல் நின்று அதிலே யுறைகின்றோமென்பதுந் தெரியாமல் மயங்கும் நிலைபோல் ஆன்மாப் போத விகாரங்கள் நீங்கி யருந்தாநின்ற ஆனந்தத்திலே அவசமுற்று அதி லழுந்தினபொழுது இவனை விழுங்கித் திரும்ப விடாத ஆனந்தமேவீடு பொருந்திய நிலை சிவபோகமா மென்க.

௩௭. மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையகங் காண்பது மறித்துக் காட்சியே—எ-து

இங்ஙனந் தசகாரியத்தில் அமைத்துக் கூறிய பதி பசு பாச வவதாரங்கள் மூப்பதிற் பதியவதாரத்திற் கூறுகின்ற சுக மானந்தமென்னு மிரண்டருளும் பொருந்துஞ் சமாதிநிலை தவறினும் விதிப்படிப் பஞ்சாக்கரத்தை யுச்சரித்துப் பசுவவதாரத்திற் கூறுகின்ற விளக்கொளியுஞ் சூரியனொளியும்போன்ற ஞானம் பரை யிரண்டினில் ஞான விளக்கைத் தூண்டிக்கொண்டு அதினாலே பேரொளியாகிய பரை நிறைவா மவ்வருளினுள் உலகத்தைக் காண்பது பைம்மறியாக மறித்துக் காணுங் காட்சியா மென்றவாறு.

உலகத்தைப் பைம்மறியாகப் பார்க்கிற் பரை தெரிசன மாதற்கும் அப்பரையைப் பைம்மறியாகப் பார்க்கிற் சிவதெரிசனமாதற்கும் பிரமாணம்:

"பைம்மறியாப் பார்க்கிற் பரையாகு மப்பரையைப்,
பைம்மறியாய்ப் பாரீர் பரம்" எனவும்,

"நனவாதி யந்தத்தி னூடுசுகந் தன்னைக்
கனவாதி யந்தத்திற் கண்டு—நனவாதி
தோற்றியிடும் போதந்தச் சுகரூபங் கண்டவர்கண்
மாற்றிடுவ ரென்றும் மலம்"

எனவும் வருவது காண்க.

அவ்வருளெனச் சுட்டியது பதியவ்தாரத்திற் கூறிய சுக மானந்த மிரண்டும் பசுவவதாரத்திற் கூறிய ஞானம் பரை யிரண்டுமாக நாலருளினுள் உலகத்தைப் பைம்மறியாக மறித்துக் காணுங் காட்சி பரையாதலாலெனன வறிக.

தத்துவரூபம் தத்துவதெரிசனம் தத்துவ சுத்தி மூன்றில் பூதப்பழிப்பு பொறியறவுணர்தல் அந்தக்கரணசுத்தி கலாதிஞான நிராகரணம் சுத்ததத்துவ தூடணம் தத்துவாதீதம் சகல தெரிசனமா மேழவதாரமும் அடங்கி வருமாறுபோல, எனை யிருபத்துமூன்றவதாரமுஞ் சிவரூபம் சிவதெரிசனம் சிவயோகம் சிவபோகம் நாலும் இதில் அடங்கிவரும் ஆன்மரூபம் ஆன்மதெரிசனம் ஆன்மசுத்தி மூன்றுமாக வேழினுள் ளடங்கி வருமாறு குருவருளாலுணர்ந்து மூப்பதையும் பத்தி லமைத்துக்கொள்ளவும்.

சிவாநந்தபோத சார முற்றும்.

திருச்சிற்றம்பல தேசிகன் திருவடிகளே துணை.

## தருமபுரம், சிவாநந்த போத சாரத்தில் முப்பதவதரத்தையுந் தேசகாரியமாய்ச் சொன்னதற்குத் தொகை.

| | |
|---|---|
| மூர்த்திச் சகலம் | ஆன்மதெரிசனம் |
| பூதப் பழிப்பு | பரை தெரிசனம் |
| பொறியறவுணர்தல் | பரையில் வியாத்தி |
| அந்தக்கரண சுத்தி | பரையோகம் |
| கலாதிஞான நிராகரணம் | பரைபோகம் |
| சுத்ததத்துவ தாடணம் | ஆன்மசுத்தி |
| பிராணவாயு நீக்கம் | சுகரூபம் |
| கேவலம் | சுகாதீதம் |
| கேவல நிலை | சிவரூபம் |
| திரோதானசத்தியின் தெரிசனம் | சிவதெரிசனம் |
| இச்சாசத்தியின் தெரிசனம் | சிவயோகம் |
| கிரியாசத்தியின் தெரிசனம் | சிற்பரானந்த தெரிசனம் |
| ஞானசத்தியின் தெரிசனம் | சிற்பரானந்த யோகம் |
| ஞானாதீதம் | சிவபோகம் |
| ஆன்மரூபம் | உலகப்பழிப்பு ஆக ௩௦ |

---

| | | | |
|---|---|---|---|
| பாசவவதரம் | எ | சாக்கிரம் | ௧௫ |
| பசுவவதரம் | ௧௨ | சொப்பனம் | ௯ |
| பதியவதரம் | ௯ | சுழுத்தியில்லை | |
| | | துரியத்தில் | ௨ |
| | | துரியாதீதத்தில் | ௪ |
| | | ஆக | ௨௯ |

உலகத்தைப் பழித்துப் பரையாகப் பார்க்கிற் சொப்பனமும், சிவமாகப் பார்க்கிற் றுரியமுமாம்.

## சித்தாந்த சாத்திரத்தில் முப்பது அவதரத்தையுந் தேசகாரியத்தில் ஏழாயடக்கிச் சொன்னதற்கு வகை

பூதப்பழிப்பு
பொறியறவுணர்தல்
அந்தக்கரணசுத்தி
கலாதிஞானநிராகரணம்
சுத்த தத்துவ தாடணம்
தத்துவரூபம் 1
தத்துவ தரிசனம் 2
தத்துவசுத்தி 3
கேவலம்
கேவல தரிசனம்
கேவலாதீதம்
ஆன்மரூபம் 4
ஆன்ம தரிசனம் 5
ஞான தரிசனம்
ஞானாதீதம்

பரைதரிசனம்
பரையோகம்
பரைபோகம்
பரையிலதீதம்
சுத்தாவத்தை
சுகரூபம்
சுகாதீதம்
சிவப்பேறு
ஆன்மசுத்தி
பரமானந்த தரிசனம்
பரமானந்தயோகம்
பரமானந்தபோகம்
ஆன்மலாபம்
பரமானந்த மேலீடு
உலகப் பழிப்பு ஆக ௩0

---

பாசவவதரம் அ
பசுவவதரம் ௧௨
பதியவதரம் ௧0

ஆன்மரூபம்வரை சாக்கிரம்
பரைபோகம்வரை சொப்பனம்
பரமானந்தயோகம் துரியம்
பரமானந்தமேலீடு அதீதம்

முற்றிற்று.

குருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே துணை.